குறித்து *5* ஆம் தேதி நடைபெறவிருக்கும் மானியக் கோரிக்கையில் விளக்கமாகக் குறிப்பிட இருக்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுள்ளது பற்றி துறை பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) சென்னை, நந்தனத்திலுள்ள தேவர் சிலைக்கு சேதம் ஏற்படுத்த நடந்த முயற்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று இரவு சென்னை, நந்தனத்திலுள்ள தேவர் பெருமகனார் சிலையை 50—க்கும் மேற்பட்டவர்கள் தாக்க முயற்சி மேற்கொள்ளுகிறபோது, காவல் துறையினர் அவர்களைக் கைது செய்து காவல் நிலையத்தில் வைத்துள்ளார்கள். இதுபோன்று தேசியத் தலைவர்களுடைய சிலைகளை, சில தீய சக்திகளின் ஊடுருவல் காரணமாகத் தாக்குவதைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்வதோடு, கடுமையான தண்டனைகள் என்ற அடிப்படையில் பல்வேறு தண்டனைகள் வழங்கப்படுவதோடு, தேசியத் தலைவர்களுடைய சிலைகளுக்கு முழுப் பாதுகாப்பு அளிப்பதற்கு இந்த அரசு முன்வரவேண்டுமென்று உங்கள்மூலம் வலியுறுத்தி, அமர்கிறேன்.

(ஆ) மகாபலிபுரம், வன்னியர் இளைஞர் பெருவிழாவிற்கு வந்தவர்கள் வழிமறித்துத் தாக்கப்பட்டது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS